மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம். ஒரு சில பள்ளிகள் தவிர பெரும்பாலான பள்ளிகளில் பொறியியல் பிரிவில் மாணவர் எண்ணிக்கை 10-க்கும் குறைவாக உள்ளது.

(இ) மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தபோதிலும், பொறியியல் பிரிவு ஆசிரியர்களின் வேலை செய்ய வேண்டிய பாடவேளையின் எண்ணிக்கையில் குறைவில்லாததால் போதனை நேரம் குறைய வழியில்லை.

(உ) இல்லை.

Common Service Register for the Teachers

@ *66. Q.—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Government have proposed to introduce the Common Service Register System for the teachers, since their service is one and the same irrespective of the places in which and administration under which they serve; and

(b) if so, when this system will be brought into force?

ஆசிரியர்களுக்குப் பொதுவான ஊழியப் பதிவேடு

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆசிரியர்கள் எங்கு எந்த நிர்வாகத்தின் கீழ் பணி புரிந்தாலும் அவர்கள் ஆற்றும் பணி ஒன்றாக உள்ளதால், அவர்களுக்கான ஊழியப் பதிவேடு பொதுவானதாக (Common service register) வைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆமெனில், இதை எப்போது முதல் அமுலுக்குக் கொண்டுவர உத்தேசித்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) இவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, 1967-ஆம் ஆண்டு மே மாதம் 17-ந் தேதி ஊட்டியிலே நடைபெற்ற கல்வி மகாநாட்டிலேயே கல்வி அமைச்சர் அவர்கள் இதை (ஆசிரியர் பொது ஊழியப் பட்டியல்) ஒப்புக் கொண்டிருக்கின்றார்கள். இன்னும் நடை முறைப்படுத்தப்படாமல் இருக்கின்றது. பரிசீலனையில் உள்ள இந்தப் பிரச்சினையை எவ்வளவு காலத்திலே நடைமுறைப்படுத்துவதற்கு முன்வருவார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

@ 23—11—1973 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

1973 நவம்பர் 24]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே. டாக்டர் பால் அவர்களுடைய தலைமையின்கீழ் அரசுக் குழு இந்தப் பரிந்துரையைச் செய்திருக்கின்றது. விடுப்பு சம்பந்தமான விதிமுறைகளிலும், கணக்கீடு சம்பந்தமான விதிமுறைகளிலும், வித்தியாசம் ஏதுமில்லாமலிருந்தால், குழு பரிந்துரை செய்தவாறு ஆசிரியர்கள் எங்கு எந்த நிலையில் பணியாற்றிக்கொண்டிருந்தாலும், ஏற்றவாறு ஒரு பொது ஊழியப் பதிவேட்டினை வைத்துக்கொள்ளலாம் என்று பள்ளிக் கல்வி இயக்குநர் பரிந்துரை செய்திருக்கின்றார், அரசினர் அதன்மீது சில குறிப்புகள் கேட்டிருக்கின்றார்கள். அந்தக் குறிப்புகள் வந்த பிறகு தக்க முடிவு எடுக்கப்படும்.

Participation of the Hon. Minister for Education in a Meeting

@ * 67. *Q.*—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education be pleased to state whether it is a fact that action was taken against such of those teachers as were absent at the meeting held at Devakottai in which the Hon. the Minister for Education participated?

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கலந்து கொண்ட கூட்டம்

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தேவகோட்டையில் கல்வி அமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட ஒரு கூட்டத்திற்கு ஆசிரியர்கள் வரவில்லை என்றதால், வராத ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, அப்படி ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்து அதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், அது நீக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பொது மக்களுடைய நன்கொடையை, பொருள்களாக, தொகைகளாக வந்தவைகளை பொதுமக்கள் பார்வைக்காகக் கொண்டுவருமாறு ஊராட்சி ஒன்றிய ஆணையர் சுற்றறிக்கையின் மூலம் ஆசிரியர்களைக் கோரியிருந்தார். சுற்றறிக்கையைப்

@ 23—11—1973 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.